ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

महीपुत्रो मित्रं वसु च गृहिणी बन्धुजनते-
त्यविद्याकल्पान् तान् रजतमिव शुक्त्यां विलसतः ।
विलोक्य त्वं चेतः भ्रमसि किमरे मूढ सततं
भवानीनाथं तं भज लषितमाश्लेषघटयेत् ॥ २४ ॥

𑌮𑌹𑍀𑌪𑍁𑌤𑍍𑌰𑍋 𑌮𑌿𑌤𑍍𑌰𑌂 𑌵𑌸𑍁 𑌚 𑌗𑍃𑌹𑌿𑌣𑍀 𑌬𑌨𑍍𑌧𑍁𑌜𑌨𑌤𑍇𑌤𑍍𑌯
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌲𑍍𑌪𑌾𑌨𑍍 𑌤𑌾𑌨𑍍 𑌰𑌜𑌤𑌮𑌿𑌵 𑌶𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌲𑌸𑌤𑌃 ।
𑌵𑌿𑌲𑍋𑌕𑍍𑌯 𑌤𑍍𑌵𑌂 𑌚𑍇𑌤𑌃 𑌭𑍍𑌰𑌮𑌸𑌿 𑌕𑌿𑌮𑌰𑍇 𑌮𑍂𑌢 𑌸𑌤𑌤𑌂
𑌭𑌵𑌾𑌨𑍀𑌨𑌾𑌥𑌂 𑌤𑌂 𑌭𑌜 𑌲𑌷𑌿𑌤𑌮𑌾𑌶𑍍𑌲𑍇𑌷𑌘𑌟𑌯𑍇𑌤𑍍 ।

ஹேசேத: மூடமனமே! பூமி, புத்திரன், மித்திரன், பொருள், பெண்டீர் பந்துக்களின் கூட்டம் இவையாவும் இப்பியில் வெள்ளிபோல் அவித்தையால் கற்பிக்கப்பட்டதாய்க்கொண்டு தோன்றுகிறது. இவ்விதம் அவித்தியா கற்பிதமான இவைகளைப் பார்த்து உண்மையை நன்குணராமல் எப்பொழுதும் அவைகளிலே மோகங்கொண்டு சுற்றுகிறாய். இதுவரையில் நீ அபிமானம் வைத்துச்சுற்றியதால் கிட்டிய பயன் யாது? ஒன்றுமில்லை; அடிக்கடி துக்கம்தான் அதிகம் அனுபவிக்கப்பட்டது.' ஆகையால் இனியாகிலும் அவைகளிலுள்ள பிரமத்தை அறவே விலக்கி ஸகலலோகங்களுக்கும் மாதாவாய் விளங்கும் ஸ்ரீ பார்வதிதேவியினுடைய பதியான ஸ்ரீபரமேசுவரனை விதிப்படி ஆராதனம் செய்- அவனை ஆராதித்தால் ஸம்ஸாரதுக்கத்தைப் போக்கி, நீ விரும்பிய உத்தமபலத்தை சீக்கிரமாக அவர் உனக்குஅளிப்பார்.

நீர்க்குமிழிபோல் நிலையற்றதாயுள்ளதும் ஸகலகஷ்டங்களுக்கும் காரணமாயிருப்பதுமான இந்த ஸம்ஸாரத்தையே அறிவின்மையால் சிறந்த புருஷார்த்தமாகக் கருதி எப்பொழுதும் அதிலேயே சுற்றும் தம் மனதைப்பார்த்து ஒருவர் கூறுகின்றதாவது ஹெ மூட சித்தமே, இதுவரையில் கெட்டதுபோதும் இனியாகிலும் கைலாஸவாஸியான மஹேசனை ஆராதித்து உத்தமமான சிரேயஸ்ஸைப்பெறு. ஜன்மாவை வீண்பண்ணாதே என்றுபதேசிக்கிறார்.

உபபத்திராதிபர்,

சுபம்.

F914

வேதாந்த ஸார ஸங்கிரஹம்.

(மூன்ருவது வர்ணகம்.)

(528-வது பக்கத்தொடர்ச்சி)

நம்மால் பார்க்கப்படும் ஸகலப்பிரபஞ்சமும் ஸத்தியமென்று கருதும் அக்ஞர்களுக்கு இருக்கும் பிரமத்தைப்போக்கி ஆத்ம ஸ்வரூபம்தான் ஸத்யமான வஸ்து. இதா வஸ்துக்கள் யாவும் அநித்தியமென்பதை யறிவிக்கவேண்டி இந்த வர்ணகத்தில் பிரபஞ்சத்தைப்பற்றி விசாரிக்கிருர்.

சிஷ்யன் குருவினிடம் வந்து அடிவணங்கி வினவுகின்ருன். ஸ்வாமின் இப்பிரபஞ்சம் எத்துணைப் பிரகாரமாகும்.

குரு:— சிதாத்மாவென்றும் அசிதாத்மாவென்றும் இருவகையாகும்.

சிஷ்:— இப்பிரபஞ்சத்தில் ஸம்மந்தப்படாமல் அதீதமாயிருக்கும் ஆன்மஸ்வரூபத்தைப் பிரபஞ்சத்திலுள்ளிருப்பதாக எப்படிக் கூறவியலும்.

குரு:— பிரபஞ்சமென்ருல் சேதனஸ்வரூபம், சில அசேதனஸ்வரூபம் சில இவ்விரண்டும் சேர்ந்து தான் பிரபஞ்சமென்று வியவகரிக்கப்படுகின்றது. ஆத்மாவென்று சொல்லப்படும். சேதனரூபமான வஸ்துவன்றி பிரபஞ்சமில்லையாகையால் அதற்கும் பிரபஞ்சத்தில் அந்தர்பாவம் அங்கீகரிக்கத்தான் வேண்டும்.

சிஷ்:— அப்படியானல் சேதனமென்ருல் என்ன ? அசேதனமென்ருல் என்ன ?

குரு:—தாமாகப்போகும்சக்தியுடன் கூடிய ஸகலமான ஜங்கமங்களும் சேதனன் என்று கூறப்படுகின்றன. ஸ்வயமாகச்செல்லும் சக்தியற்றமைற்றஸ்தாவரங்கள் யாவும் அசேதனங்களாகும்.

சிஷ்:— இவ்விதம் கூறினல் சேதனங்களுக்குள்ளும் அசேதனங்களுக்குள்ளும் பலவகைப் பிரிவிருக்கின்றபடியால் இரண்டு வித்மென்று எப்படிக்கூறலாம்.

குரு:—அனுத்மாவென்பது ஒரே வஸ்துதான்; அது தான் ஒன்ருயிருந்தாலும் கார்யரூபத்தால் பலவாகின்றது. ஆத்மாவென்பதும் ஒரே ரூபம்தான். அதுவும், அனுத்மாவான மாயையினுடைய கார்யங்களுக்கு உபாதியாயிருப்பதால் அநேக ஜீவர்களாகவும் அனேக ஈச்வார்களாகவும் ஆகின்றது.

சிஷ்:— ஒருவனுய் விளங்கும் ஈசுவரனுக்கு ஜீவனுக்குப்போல் அனேக ரூபம் எப்படி ஏற்படும்.

குரு:— புண்யக்ஷேத்திரங்களிலும் கிராமங்களிலும் கிரகங்களிலும், சிவ விஷ்ணுமுதலான பலமூர்த்திபேதங்களிருப்பதைக் கொண்டு சொல்லப்படுகின்றது.

சிஷ்:— மண், கல், லோகம் முதலானவைகளாக விளங்கும் அந்த மூர்த்திகளுக்கு, ஈசுவாத்வம் எப்படி ஸித்திக்கும்?

குரு:— பல மஹான்களும் அந்த மூர்த்திகளுக்கு விசேஷமான பொருளைச் செலவிட்டு சரீரப்பிரயாஸையுடன் அபிஷேகம், அர்ச்சனம், நிவேதனம் முதலிய ஆராதனங்களைச் செய்து இஷ்டஸித்தியையடைகிறபடியால் அவைகளுக்கு ஈசுவரத்தன்மை உண்டென்றே கொள்ளவேண்டும். எவர்களுக்கு சாஸ்திரங்களிலும், வேதங்களிலும் ஸத்குருக்களுடைய உபதேசங்களிலும், சிஷ்டாசாரங்களிலும் நம்பிக்கையில்லையோ, அவ்வித நாஸ்திகர்களை இங்கு உதாரணமாகக் காட்டக்கூடாது, எந்தவிடங்களிலும் ஈசுவரன் உண்டு. சாஸ்திரார்த்தங்கள் ஸத்தியம், தர்மம், அதர்மம், பாபம், புண்யம் இவைகளுடைய பலன்களை நாம் அனுபவித்தே தீரவேண்டும் என்று சிரத்தையுடன் இருக்கும் ஆஸ்திக மஹாஜனங்களுக்குத்தான் இங்கு உதாஹாணம் காண்பிக்கப்படுகின்றது. பின்னும் மிகவும் துர்கந்தமான மலம், மூத்

திரம், மஜ்ஜா மாம்ஸம், ரக்தம் முதலான ஆபாஸவஸ்துக்களின் ஸ்வரூபமாயிருக்கும் இந்த சரீரத்தில் ஆத்மா என்று கருதுகின்ற ஜீவர்களுக்கு யாதொரு தோஷமுமின்றி சுத்தமாய் விளங்கும் லோகம், சிலை முதலான வஸ்துக்களில் ஈசுவரபுத்தியை வைப்பதில் என்ன தோஷம்? கீதாசாஸ்திரத்தில்

यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति ।
तस्य तस्याचलां श्रद्धां तामेव विदधाम्यहम् ॥

யோயோயாம்யாம் தநும் பக்த: ச்ரத்தயார்ச்சிதுமிச்சதி ।
தஸ்யதஸ்யாசலாம் ச்ரத்தாம் தாமேவ விததாம்யஹம் ।

எவனெவன் எந்தெந்தமாதிரி மூர்த்தியாக என்னை பாவித்து சிரத்தையுடன் அர்ச்சிக்கிறானோ, அவனவனுக்கு அந்தந்த ரூபமாக நான் இருந்துகொண்டு திருடமான பக்தியையுண்டு பண்ணி அனுக்கிரஹம் செய்கிறேன் என்று பகவானும் சொல்லியிருக்கிறார்; ஆகையால் ஈசுவரனுக்கு அநேக ரூபங்கள் ஏற்படலாம். ஈசுவரஸம்பந்தமில்லாத வஸ்துக்களே உலகிலில்லை. ஆனாலும் சுத்தமான சிற்சிலவிடங்களில் பவித்திரமான வேதமந்திரங்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டவிடத்தில் ஈசுவரஸாந்நித்யம் அதிகமிருப்பதால் அந்த மூர்த்திகளை உபாஸிக்கிறார்கள். (தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஸ்ரீ காசி பிராமண மஹாஸம்மேளனம்.

(536-வது பக்கத்தொடர்ச்சி.)

இனி 3-தினங்களிலும் ஸபையில் நடந்த விவரங்களைச் சுருங்கச் சொல்லி விஷயத்தை முடிக்கிறேன்.

முதலில் ஸபையில் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விஷயம்

गोरक्षणं सनातनधर्मीयाणां मातृपरिपालनमिव परमं कर्तव्यमिति सर्वैरपि सनातनधर्मीयैः तदर्थं बद्धपरिकरैर्भाव्यमितीयं सभा साभिनिवेशं

सूचयति । गोरक्षणं सनातनधर्मीयाणां मातृपरिपालनवत् अवश्यं कर्तव्यमिति सर्वैरपि सनातनधर्मीयैः तदर्थं बद्धपरिकरैर्भाव्यमितीयं सभा साभिनिवेशं सूचयति ।

கோரக்ஷணமென்பது ஸனாதன தர்மிகளுக்கு மாத்ரு பரிபாலனம் போல் அவசியம் செய்யத்தக்கது. அதற்காக ஸனாதன தர்மிகள் யாவரும் வெகு முயற்சியெடுக்கவேண்டுமென்று இச்சபை முக்ய மாய் கோருகிறது என்ற இவ்விஷயத்தை பண்டித ஸ்ரீ அகிலானந்த கவிரத்னர் பிரேரித்தார். அதை மஹாமஹோபாத்தியாய பண்டித விருபாக்ஷ சாஸ்திரிகளும் மஹாமஹோபாத்யாய பண்டித தர்க்காசரண ஸாங்கிய வேதாந்த தீர்த்தரும் அனுவதித்துக் கூறிய தன்மேல் ஸபையோர்களால் ஜயத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இங்கு ஓர் விசேஷம் கூற வேண்டியது அவசியம்.

ஸபை ஆரம்பத்தில் ஒரு பிறவிக்குருடன் ஸபை நடுவே உயர்ந்த ஆஸனத்தில் கொண்டுவந்து அமர்த்தப்பட்டார். ஆனால் அவர் பாடுகிறவர். அதற்கு வேண்டிய ஸாதனங்களுடனும் உட்கார்ந்தார். ஸபை ஆரம்பத்தில் 2-நிமிஷம் இந்துஸ்தானியில் பாடினார். இவர் நடுவே சிரமபரிஹார ஸமயம் பாடச் செய்வதற்கு அமர்த்திருக்கிறார்களென்றே அவர் தேசத்தார் நினைத்தார். ஆனால் அப்படியல்ல இவர் ஆசுகவி. கோரக்ஷணதீர்மானம் முடிந்தவுடன் இவரைப் பாடும்படி கேட்டுக்கொண்டு தூக்கி நிறுத்தினர். உடனே அவர் கோரக்ஷணத்திற்காகப் பேசின மஹான்களுடைய பெயரையும் அவர்கள் கூறிய பிரமாண வசன ஸாரங்களையும் ஸனாதன கர்மத்திற்கு இதுதான் முக்கியமென்று முதல் முதல் இச்சபை கேட்டுக்கொள்ளுகிறதென்றும் வெகு அழகான மெட்டுக்களுடன் பாடியாவரையும் ஆனந்த ஸாகரத்தில் அடியில் அமிழ்த்திவிட்டார். யாவரும் பரவசமடைந்தனர். (தொடரும்)

M. N. சுப்ரம்மண்ய சாஸ்திரிகள்.

நவராத்திரியில் லக்ஷார்ச்சனை
(நெரிஞ்சிப் பேட்டை.)

ஸகல புண்ய நதிகளிலும் சிறந்த தக்ஷிண கங்கை என்று வழங்குகிற அகண்டகாவேரீ தீரத்தில் விளங்காநின்ற வைசிய

598

ஜகத்குரு ஸ்ரீமத் தர்மசிவாசார்யஸ்வாமிகள் மடத்தில் சுமார் 250 வருஷத்திற்கு முன்னிருந்த ஸ்ரீ பாஸ்கா தர்மசிவாசார்யஸ்வாமிகள் அவர்கள் இவ்வூரில் சிவாலயம் இல்லாத குறையை நிவர்த்திக்க வேண்டி ஓர் சிவாலயத்தைக் கட்டி ஸ்ரீ காசிக்ஷேத்திரத்திலிருந்து கொண்டுவரப்பட்ட விசுவநாதேசுவாலிங்கத்தையும் அதற்கு அநுகுணமாகவிசாலாக்ஷி அம்பிகையையும் பிரதிஷ்டைசெய்து ஸ்ரீமடத்தின் ஆதாவிலிருந்தே நித்யபூஜை, நித்யோத்ஸவம், பக்ஷோத்ஸவம், மாஸோத்ஸவம், ரதோத்ஸவம் முதலிய கைங்கர்யங்களும் நடக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அதன் பிறகு அந்த ஸ்தானத்தில் இருந்து வந்த ஒவ்வொரு மடாதிபதிகளும் சிவ கைங்கர்யத்தில் அத்யாஸக்தர்களாய்க் கொண்டு பூஜை உத்ஸவம் முதலியவைகளை மேன்மையாகவே நடத்திக்கொண்டு வந்தார்கள். சுமார் 70-வருஷத்துக்குமுன் இந்தப் பீடத்தை அடைந்தவரும் லௌகிக வைதிக மார்க்கங்களில் அதிக பரிசயமுள்ளவரும் சிஷ்ய ஜனங்களின் விசேஷமான பிரீதிக்குப் பாத்ரபூதரும் மடத்துக்கு விசேஷமான பூஸ்திதியையும் கௌரவத்தையும் ஸம்பாதித்துப் புதிய நாகரீக முறையில் மடாலயத்தை நிர்மாணம் செய்தவருமான ஸ்ரீ லக்ஷ்மீநாராயண தர்மசிவாசார்யஸ்வாமிகள் அவர்கள் லக்ஷம் ரூபாய்க்கு மேல் செலவுசெய்து ஷை சிவாலயத்தை அநேகமாக ஜீர்ணோத்தாரணம் செய்து வைத்தார். அம் மஹானுக்குப் பிறகு தற்காலம் இப்பீடாலங்கிருதாளாய் இருக்கிற ஸ்ரீ சுவாமிகள் அவர்களால் விசேஷ சிரத்தையுடன் திருப்பணியைப் பூர்த்தி செய்து சென்ற ரக்தாக்ஷிவருஷ தைமீ மஹா கும்பாபிஷேகத்தையும் நடத்தி அதுமுதல் விசேஷமாக பூஜோத்ஸவாதிகள் நடத்தப்பட்டு வருகிற இவ்வூர் சிவாலயத்தில் தத்காலம் சிஷ்யானுக்ரஹார்த்தம் பங்களூரில் விஜயம் செய்திருக்கிற ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞாப்ரகாரம் சென்ற வருஷம்போல் ஸ்ரீ விசாலாக்ஷி சமேதரான ஸ்ரீ விசுவநாதேசுவாருக்கு இம்மஹாநவராத்ரோத்ஸவ காலத்தில் ஆஸ்திகர்களான வித்வான்களைக் கொண்டு ப்ரதிதினமும் நடத்தப்பட்ட மஹந்யாஸ பூர்வகமான விசேஷ அபிஷேகம், வேதபாராயணம், அம்பிகைக்கு விசேஷமான அலங்காரம் குங்குமத்தாலும் விசேஷ புஷ்பங்களாலும் உத்ஸவ பூர்த்திக்குள் லலிதா லக்ஷார்ச்சனம், வாத்யகோஷ, வேதகோஷங்களுடன் மஹாதீபாராதனுதி உபசாரங்கள் ஸுவா

ஸினீ பூஜை பிராம்மண ஸந்தர்ப்பணம் ஸுவாஸினீ ஸந்தர்ப்பணம் முதலிய கைங்கர்யங்கள் இது பூலோக கைலாஸமோ என்று எண்ணும்படி பார்ப்பவர்கள் மனதைப் பரவசப்படுத்தியது. 24-10-28 விஜயதசமி தினம் ஸர்வாலங்காரத்துடனும் ஸகல பிருதுகளுடனும் வாத்யகோஷங்களுடனும் நடந்த அம்பிகையின் விஜயயாத்திரை ஸகல ஜ்னங்களுக்கும் விசேஷ குதூகலத்தை அளித்தது. உத்ஸவசப்தத்தை அர்த்தமுள்ளதாகச் செய்தது. 28-10-28 ல் வழக்கம்போல் அன்னாபிஷேகமும் 29-10-28ல் லக்ஷார்ச்சனைக்கு அங்கமாக விசேஷமான பிராம்மண ஸந்தர்பணமும் அன்று உத்ஸவத்திற்கு வந்திருந்த வித்வான்களுக்கு ஸம்பாவனைகளும் செய்யப்பட்டு உத்ஸவம் பூர்த்தியடைந்தது.

அம்பிகையின் திருவருளால் வெகுகாலமாய் மழையில்லாமல் வருத்தப்பட்டுக்கொண்டிருந்த வியவஸாயிகளின் துயரம் நீங்க 15-தினங்களாக விசேஷமான மழைகள் பெய்து குளம் குட்டைகளும் பூர்த்தியாகி விட்டது. "தேவர்களை ஆராதித்தால் அவர்களும் நம்மை திருப்தி செய்து வைப்பார்கள்" என்ற கீதா வசனம் ஒருககாலும் பொய்யாகாதென்ற எண்ணம் எல்லோருக்கும் ஏற்பட்டது. இவ்வுத்ஸவத்தை இவ்வளவு மேன்மையாக நடத்திவைக்கும் விஷயத்தில் ஸ்ரீமடம் ஹேஜண்டு ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்கள் எடுத்துக்கொண்ட சிரத்தையும் இவ்வுத்ஸவத்தில் கலந்துகொண்டு மேன்மையாக நடத்திக் கொடுத்த இவ்வூர் ஆஸ்திகர்களின் சிரத்தையும் மிகவும் பாராட்டத்தக்கது.

N. K. வேங்கட்ரமணசாஸ்திரிகள்.

தீபாவளி பண்டிகை.

ஸ்ரீ வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் மகாவிஷ்ணு சன்னதியில் ஜயவிஜய என இரண்டு துவாரபாலகர்கள் இருந்தார்கள். அவர்கள்பகவானுக்குக்கைங்கர்யம்செய்துகொண்டிருப்பவர்கள். ஒரு நாள் பிரும்மதேவர்களுடைய மானஸ புத்திரர்களாகிய ஸனகாதி முனிவர்கள் பகவானை தரிசிக்க வைகுண்டத்திற்கு வந்தார்கள். அவர்களை துவாரபாலகர்களான இருவரும் மதிக்காமலும்,

ஸன்னிதானத்திற்குள் போகவொட்டாமலும் தடுத்துவிட்டார்கள். ஸனகாதியோகிகள் உடனே கோபங்கொண்டு இருவரையும் பூலோகத்தில் அசுரர்களாகப் பிறக்கும்படிக்குச் சபித்துவிட்டார்கள். இதற்குள் மஹாவிஷ்ணுவும் அவ்விடம் வந்து நிகழ்ந்ததையறிந்தார். மூன்று ஜென்மம் தனக்குப் பகைவனாகயிருந்து, தன் கையால் மரணமடைந்து கடைசியில் தன்னுடைய ஸன்னிதானத்திற்கு வரும்படி உத்திரவு செய்தார். அவ்விதமே அவர்கள் முதலாவது ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு என்றும், இரண்டாவது இராவணகும்பகர்ணனென்றும்; மூன்றாவது கிசுபாலன் தந்தவக்ரன் என்றும் மூன்று ஜென்மங்களெடுத்தார்கள்.

வராஹாவதாரம்:—

அவர்களுடைய முதல்ஜென்மத்தில் இளையோனாகிய ஹிரண்யாக்ஷன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டுபோய் ஆழ்கடலில் ஒளிந்திருந்தான். அப்போது பிரும்மாதிதேவர்கள் துஷ்டநிக்ரஹசிஷ்டபரிபாலனார்த்தம் பூவுலகத்தில் அவதாரம் செய்திருக்கும் ஸ்ரீமஹாவிஷ்ணுவினிடம் சென்று முறையிட்டனர்.

அன்னவர் தேவர்களின் முறைப்பாட்டிற்கு இணங்கி வாராஹாவதாரமென்னும் பன்றிரூபமெடுத்துக் கடலில் மறைந்திருக்கும் அந்தக்கொடிய இராக்ஷதனைத் தன்னுடைய கத்தி, கதைகளால் ஸம்ஹரித்துப் பூமியைப் பந்து உருவமாக்கித் தன் மூக்கினால் எடுத்துக்கொண்டுவந்து முன்போலிருக்கச்செய்தனர்.

நரகாஸுரன் உற்பத்தி:—

அந்த ஸமயத்தில் பூமாதேவி தன் நாதனுடைய ஸ்வரூபத்தைக்கண்டு மோஹிக்க அவள் ஓர் புத்திரனைப் பெற்றாள். அந்தக் குழந்தைராக்ஷதரூபமாயிருந்தபடியால் அதற்குநரகாஸுரன்என்று நாமகரணம் செய்தாள். உடனே பூமாதேவி பகவானை நோக்கி இக்குழந்தை இறக்காவரமளிக்கவேண்டுமென வேண்டினாள். இவன் அஸுரனானபடியால், சாகாவரமளிக்கமுடியாது என்றும், உனக்குத் தெரியாமல் அவன் இறக்கமாட்டானென்றும் சொன்னார்.

அதைக்கேட்ட பூமாதேவியானவள் தான் அணிந்திருந்த ஓர் முத்துமாலையைக் குழந்தைக்கழுத்திலிட்டு அம்மாலை அவன் கழுத்திலிருக்குமளவும் அவனை யாரும் கொல்லாதிருக்கவும், தன்னாலேயன்றி வேறொருவராலும் அம்மாலை அறுபடாதென்றும் ஓர் வரமளித்தாள்.

பிறகு குழந்தை நாளொருமேனியும் பொழுதொரு வண்ண முமாக வளர்ந்து வந்தான். காலக்கிரமத்தில் சகல வித்தைகளை யும் கற்றுக்கொண்டான். உடனே மிகவும் மேன்மையானதும், செழிமையுள்ளதும், பொன்நகர் போன்றதுமான பிராக்ஜோதிட பட்டணத்தைத் தன் குமாரனை நரகாசுரனுக்குப்பூமாதேவி முடி சூட்டி வைத்தாள்.

நரகாசுரன் அரசாக்ஷி:—

நரகாசுரன் தன்னுடைய மந்திரிபிரதானிகளுடன் இராஜ்ய பரிபாலனம் செய்துவந்தான். பத்து திக்குகளிலும் சென்று ஜெயம் பெற்றுக் கடைசியில் தேவலோகஞ்சென்றான். தேவர்க ளுடன் போர்புரிந்து அங்குள்ள அதிதிகுண்டலங்களையும், வரு ணன் வெண்குடையையும் கைப்பற்றிக்கொண்டு வந்தான். இப்ப டியாகத் தன்னுடைய இராஜ்யத்தை எல்லாதிசைகளிலும் பரவச் செய்தான். தானே அசுரசிரேஷ்டனென்கிற பெயருடன் மதோன் மத்தனாய் கெர்வங்கொண்டிருந்தான்.

இப்படியிருக்கையில் தன்னுடைய வம்சத்திலுள்ள ஓர் அழ கிய கன்னிகையைக் கலியாணம் செய்துகொண்டான். காலக் கிரமத்தில் இவனுக்கு ஓர் ஆண் மகவுபிறந்தது. அக்குழந்தைக்கு பகதத்தன் என்று நாமகரணஞ் செய்து, பாலூட்டி, சீராட்டி, தாலாட்டி மிகவும் மேன்மையாக வளர்த்து வந்தான். அவனு டைய பதினாறுவது வயதில் நரகாசுரன் தன் குமாரனுக்கு மணி மகுடம் சூட்ட ஆலோசித்துக்கொண்டிருக்கையில், தன் மந்திரி மார்களின சொல்படி அவன் தேவேந்திரன் முடியைக் கொண்டு வரப்புறப்பட்டான். தேவலோகஞ் சென்று இந்திரனுடன் போர் செய்து அன்னவன் அணிந்திருந்த மணிமகுடத்தை அபக ரித்துக்கொண்டு வந்து தன்னுடைய புத்திரன் பகதத்தனுக்கு முடிசூட்டிராஜ்யபரிபாலனஞ் செய்யும்படிக்கு ஏற்பாடு செய்து விட்டுத்தான் மனோல்லாஸமாயிருந்தான்.

மணிமகுடத்தையிழந்த தேவேந்திரன் மிகவும் வருத்தமுற்ற வனாய் ஸ்ரீ வைகுண்டவாஸரான மகாவிஷ்ணுவானவர் துஷ்டநிக் ரஹசிஷ்டபரிபாலனார்த்தம் துவாரகையில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத் மாவாக அவதாரம் செய்திருப்பதையறிந்து,பதரிகாச்ரமத்து ரிஷி

களுடன் அன்னவரிடம் அடைக்கலம் புகுந்தான். இதையறிந்த பாமாத்மா தேவேந்திரனுக்கபயமளித்து அவ்வசுரனுடன் போர் புரியச் சித்தமாய் புறப்பட்டார்.

அச்சமயம் பூமாதேவியின் அவதாரமும், சத்திராதித்தனின் குமாரத்தியும், பகவானுடைய பத்தினியுமாகிய சத்தியபாமா தானும் கூடவருவதாக நாதனை வேண்டினுள். அவளுடைய வேண்டுகோளுக்கு இணங்கி பகவான் அவளையும் அழைத்துக் கொண்டு பிராக்ஜோதிடபுரம் சென்றார்.

யுத்தம்.

அங்கு முதலில் கௌமோதகி என்னும் கிரிதுர்க்கையையும், பிறகு அக்னி, நீர், வாயுதுர்க்கைகளைச் சின்னபின்னப்படுத்தினர். உடனே நாகாஸுரனுடைய ஸேனுதிபதியின் பாசத்தைத் துண் டித்து அந்தப் பட்டணத்தினுடைய மதில்களைத் தன் கதையா லிடித்துச்சேதித்தபிறகு பாஞ்சசன்யம் என்ற சங்கை ஒலித்தார். அதைக்கேட்ட முறன் மஹா கோபத்துடன் பகவானுடன் சண் டைக்கு வந்தான். கிருஷ்ணபாமாத்மா தன்னுடைய அஸ்திரத் தினல் அவன் ஆயுதங்களனைத்தையும் சிதைத்துவிட்டு அவனையும் தன் சக்கிராயுதத்திற்கு இறையாக்கினர். இந்தச் செய்தியைக் கேட்ட அவனுடைய 7 புத்திரர்களும் பகவானுடன் சண்டைக்கு வர அவர்களையும் யமபுரத்திற்கு அனுப்பினர்.

பகவானுக்கும் நரகாஸுரனுக்கும் யுத்தம்.

இப்படியாக முறன் முதலானோர் போரில் மாண்டார்கள் என்ற ஸமாசாரம் கேள்விப்பட்டதும் நாகாஸுரன் மஹத்தான கோபங்கொண்டான். கண்கள் சிவக்க, உதடு துடிக்க, பற்களைக் கடித்துக்கொண்டு ஸகல ஆயுதங்களுடன் யுத்தத்திற்குத் தன் யானையின்பேரில் ஏறிச்சென்று ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கிச் சண்டை செய்ய ஆரம்பித்தான். இருவருக்கும் மஹா கொடூர மான சண்டை நடந்தது; நடுவில் பகவான் சற்று மூர்ச்சை யடைந்தார். அருகிலிருந்த பூமாதேவியின் அம்சமான சத்திய பாமா வில்லம்பு கொண்டு நரகாஸுரன்மேல் பாணத்தையெய் தாள். உடனே அவன் கழுத்திலிருந்த முத்துமாலை அறுபட் டது. மறுபடியும் கிருஷ்ணபகவான் மூர்ச்சை தெளிந்தெழுந்து தனுஸை எடுத்து அஸ்திரங்களைத் தொடுத்து அவனுடைய சிர

ஸைக் கொய்தார். இதையறிந்த தேவர்கள் புஷ்பமாறி சொறிந்தனர். துந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்கினர்.

அப்போது நாகாஸுரனின் புததிரனன பகதத்தன் பகவானிடம் வந்து அபயமளிக்கவேண்டினன். அவரும் அவனுக்கு அபயமளித்தார். பிறகு பகவான் எல்லாரோடும் பிராக்ஜோதிடபுரத்திற்குள் சென்று நாகாஸுரனல் கொண்டுவாப்பட்ட அதிதி குண்டலங்களையும், வருணனுடைய வெண்குடையையும், தேவேந்திரனுடைய மணிமகுடத்தையும் அவரவர்களிடம் சேர்ப்பித்தார். சிறைப்படுத்தியிருந்த அநேக ராஜகன்னிகைகளையும் விடுவித்துவிட்டு துவாரகைக்குத் திரும்பினர்.

மேற்சொல்லிய நாகாசுரன் உயிர்போகுந்தருவாயில் பூர்வ ஞானந்தோன்றி பகவானை நோக்கி, "சுவாமி அடியேனுக்கு மோக்ஷஸாம்ராஜ்யத்தையளித்த இத்தினத்தை திருநாளின் ஓர் பெருநாளாகக் கொண்டாட வேண்டுமென்றும், இத்தினமான அற்பிசிமாதம் கிருஷ்ணபக்ஷம் (அபரபக்ஷம்) திரயோதசி விடியற்காலம் சதுர்த்தசியிருக்கையில், எவர்கள் எண்ணெய் தேய்த்துக் கொண்டு வெந்நீரில் மங்களஸ்நானம் செய்து கோடியுடுத்து பலவித பலகாரங்களைத் தங்களுக்கு அறபணம் செய்கிறார்களோ அவர்களுக்கு லக்ஷ்மீகடாக்ஷமும், கங்காஸ்நானபலனும் அச்வமேதயாக பலனும் கொடுத்தருளவேணடுமெனப்பிரார்த்தித்தான். பகவானும் அவன் கேட்ட வரத்தையளித்தனர். அத்தினத்தைத் தான் நாம் "தீபாவளி" என்று கொண்டாடி வருகிறோம்.

அந்நாள் முதல் இப்பரதகண்டத்திலுள்ள யாவரும், பிரதி வருஷம் அற்பிசிமாதம் கிருஷ்ணபக்ஷம் திரயோதசியன்றுவிடியற்காலம் வருகிற சதுர்த்தசியில் தம்தம் சுற்றத்தார்களுடன், பந்துமித்திரர்களுடனும் அப்யங்கனஸ்நானம் செய்து, கோடியுடுத்து, அவரவர்களுடைய சக்திக்குத் தக்கவாறு பலவித பலகாரங்கள் செய்து ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு அறபணஞ் செய்து அன்னவரின் கிருபாகடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாகின்றனர்.

இது ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

K. நாராயணஸ்வாமி அய்யர்,
டீசர் முனிசிபல் ஹைஸ்கூல்.

மத்ரப்ராந்தீய ப்ராம்மண மஹாஸபை.

ஸ்ரீகாசிமாநகரில் நடந்த மஹாஸபையால் அதன் தீர்மானங்களை நிறைவேற்ற அந்தந்த மாஹாணத்திலும் கிளைச்சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. மத்ரப்ராந்தியத்திற்கு மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் ப்ரின்ஸிபால் சாஸ்திர ரத்னாகர ப்ரும்மஸ்ரீ கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரிகள் தலைவராகவும், ஸ்ரீ ராஜு சாஸ்திரிகளின் பௌத்திரர் சாஸ்திர ரத்னாகரம் ப்ரும்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள், ஜம்புகேச்வரம் ஸ்ரீ சங்கரவித்யாலயம் ப்ரின்ஸிபால் ப்ரும்மஸ்ரீ விசுவநாதசாஸ்திரி, ஸோமயாஜிகள் இருவரும் உபதலைவர்களாகவும், ப்ரும்மஸ்ரீ மதுரை தேதியூர் ஸுப்ரஹ்மண்யசாஸ்திரிகளும், வெ. ஸோமதேவசர்மாவும் காரியதரிசிகளாகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இச்சபையின் காரியாலயம் 154, தம்புசெட்டித்தெரு சாந்தாச்ரமத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு எல்லா பண்டிதர்களும் அங்கத்தினராகச் சேரவேண்டும். வருடசந்தா ரூ. 1. (ஒன்று) அதை காரியதரிசிக்கு அனுப்பப்படவேண்டும். காசிஸபையின் நடவடிக்கைகளைத் தமிழில் அச்சிட ஏற்பாடாகிவருகிறது. இதன் ப்ரசாரவேலையை ப்ரும்மஸ்ரீ தேதியூர் ஸுப்ரஹ்மண்யசாஸ்திரிகள் நடத்துவார்கள். ஆங்காங்குள்ள ப்ராம்மணமஹாஸபைகள் தங்கள் ஸபையின் அங்கத்தவர்களின் கணக்கையும் நிர்வாஹகர் பெயர் முதலியவைகளையும் இத்தலைச்சபைக்குத் தெரிவிக்கவேண்டும்!

ஸபையில்லாதவிடங்களில் ஸபையை உடனே ஏற்படுத்தவேண்டும். தர்மத்தை நிர்ணயம் செய்யவும் அதை ஆசரணைக்குக் கொண்டுவருவதும் அக்ரஜர் கடமையாதலின் இதற்கு ப்ராம்மண ஸபை என பெயரிடப்பட்டது. இஜ்ஜாதிக்கு மாத்திரம் ஏதோ நன்மையைச் செய்ய வந்ததென எவரும் அஞ்சவேண்டாம். காசியில் நடந்த ஸபைக்கு தன உதவி புரிந்தவர்களும் உடனிருந்து வேண்டிய ஸௌகரியங்களைச் செய்தவர்களும் க்ஷத்திரியர்களும் வைச்யர்களுமேயாவர். கூடியவரையில் பஞ்சமர்கள் உள்பட ஸகல வர்ணத்தவர்களுக்கும் தற்காலத்தையொட்டி இஹபரஸுக ஹேதுவான தர்மங்களை எடுத்துக்கூறி வேலை செய்ய உத்தேசித்துள்ளோம். ஒவ்வொரு பண்டிதர்களும் ப்ராம்மணர்களும் வருடச்சந்தா ஒரு ரூபாய் செலுத்தி இவ்வைதிக தர்மத்திலீடுபடும்படி மிகவணக்கமாக வேண்டுகிறோம். இதரவர்ணத்தவரளிக்கும் தனம் நன்கொடையாக அல்லது வருஷாசன ஸபையங்கத்தினர் சந்தாவாக ஏற்கப்படும்.

இங்ஙனம் விதேயன்,

ஸ்ரீவத்ஸ, ஸோமதேவசர்மா.

बहुराशिपक्षस्थिताः च्छेदा भाजके इतरपक्षे नीयन्ते । भिन्नस्य भाजकराशेर्हरो भाजकस्य गुणकः । अंशस्तु भाजकस्य गुणकः "च्छेदं लवं च परिवर्त्ये"ति भिन्नभागहारे उक्तत्वात् । अतः स्वल्पराशिपक्षस्थिताः च्छेदा भाज्यपक्षे नीयन्त इति "अन्योन्यपक्षनयनं फलच्छिदामि"त्युक्तमुपपन्नम् । एवं च फलस्य छेदानां चान्योन्यपक्षनयने कृते न्यासः,
$\frac{16 \times 125 \times 26 \times 3}{4 \times 100 \times 5 \times 2 \times 5} = \frac{39}{5} = 7\frac{4}{5}$, इदं फलम् । एवमेव सप्तराशिकादिष्वपि न्यासो वेदितव्यः ॥ ॥ ७१ ॥

अथ सप्तराशिकोदाहरणम्—

विस्तारे त्रिकराः, कराष्टकमिता दैर्घ्ये, विचित्राश्च चेत्
रूपैः, उत्कटपट्टसूत्रपटिका अष्टौ लभन्ते शतम् ।
दैर्घ्ये सार्धकरत्रयाऽपरपटी हस्तार्धविस्तारिणी
तादृक् किं लभते द्रुतं वद वणिक् वाणिज्यकं वेत्सि चेत् ॥

3	$\frac{1}{2}$
8	$\frac{7}{2}$
8	1
100	

न्यासः— लब्धं, निष्कः, 0, द्रम्माः, 14, पणाः, 9, काकिणी, 1, वराटकाः, 6, वराटकभागौ, $\frac{2}{3}$, (अत्र फलस्य च्छेदानां च पक्षविनिमये, $\frac{100 \times 1 \times 1 \times 7}{3 \times 8 \times 8 \times 2 \times 2} = \frac{175}{192}$ जाता निष्कांशाः)

विस्तारे = व्यासे, "विस्तारो विग्रहो व्यास" इत्यमरः । त्रिकराः = त्रयः कराः प्रमाणं यासां ताः त्रिकराः, तद्धितार्थद्विगुः । "प्रमाणे लः" "द्विगोर्नित्य"मिति द्वयसच्प्रत्ययस्य लुक् । दैर्घ्ये = दीर्घतायां, कराष्टकमिताः = अष्टहस्तपरिमिताः । रूपैर्विचित्राः = नानारूपैर्विचित्रवर्णाः, एवंभूता अष्टौ, उत्कटपट्टसूत्रपटिकाः = पट्टसूत्रैः = पट्टतन्तुभिः रचिताः पटिकाः, पट्टसूत्रपटिकाः उत्कटाः उत्कृष्टाश्च ताः पट्टसूत्रपटिकाश्च तथाभूताः, शतं = निष्कानित्यर्थः । लभन्तेचेत् = मूल्यतया प्राप्नुवन्ति चेत् । तदा, हस्तार्धविस्तारिणी = हस्तार्धं विस्तारो विद्यतेऽस्यामिति तथा । मत्वर्थीय इनिः । दैर्घ्ये, सार्धकरत्रया = सार्धकरत्रयं प्रमाणं यस्यास्सा तथा । प्रा-

ष्वत्प्रत्ययलोपः । तादृक्=रूपैस्तादृशी विचित्रेत्यर्थः । एवम्भूताऽपरपटी एका, किं मूल्यं लभते । हे वणिक्! वाणिज्यकं=वणिजः कर्म=वाणिज्यं, तदेव वाणिज्यकं वेत्सि चेत्, द्रुतं वद ॥ ॥ ८२ ॥

अथ नवराशिकोदाहरणम्—

पिण्डे येऽर्कमितांगुलाः किल चतुर्वर्गांगुलाविस्तृतौ
पट्टा, दीर्घतया चतुर्दशकरा, स्त्रिंशल्लभन्ते शतम् ।
एता विस्तृतिपिण्डदैर्घ्यमितयो येषां चतुर्वर्जिताः
पट्टास्ते वद मे चतुर्दशसखे मूल्यं लभन्ते कियत् ॥ ८३ ॥

12	8
16	12
14	10
30	14
100	

न्यासः— लब्धं, निष्काः, 16, द्रम्माः, 10, पणाः, 10, काकण्यौ, 2, वराटका, 13, वराटकभागः, $\frac{1}{3}$, अत्र प्रमाणफले पक्षान्तरं नीते $\frac{8\times12\times10\times14\times100}{12\times16\times14\times30}=$ $\frac{50}{3}$, निष्काः)

पिण्डे=वैशाल्ये, अर्कमितांगुलाः=अर्कमितान्यंगुलानि प्रमाणं येषां ते तथा, प्राग्वद्गुः । विस्तृतौ=विस्तारे, चतुर्वर्गांगुलाः–चतुर्वर्गः षोडश, अंगुलानि प्रमाणं येषां ते तथा । दीर्घतया, चतुर्दशकराः=चतुर्दशहस्ताः, एवम्भूताः, त्रिंशत्, ये पट्टाः=दारुमयास्तरणविशेषाः, ते शतं मूल्यं लभन्ते यदि, तदा येषां पट्टानां, एताः=उक्ताः, विस्तृतिपिण्डदैर्घ्यमितयः=विस्तारादिमितयः, चतुर्वर्जिताः=चतुर्हीनाः, अष्टांगुलपिण्डाः, द्वादशांगुलविस्ताराः, दशहस्तदैर्घ्या इति यावत् । द्वादशाश्चतुर्दश पट्टाः, कियन्मूल्यं लभन्ते । सखे मे वद ॥ ॥ ८३ ॥

अथैकादशराशिकोदाहरणम्—

पट्टा ये प्रथमोदितप्रमितयो गव्यूतिमात्रे स्थिताः
तेषामानयनाय चेच्छकटिनां द्रम्माष्टकं भाटकम् ।
अन्ये ये तदनन्तरं निगदिता मानैश्चतुर्वर्जिताः
तेषां का भवतीति भाटकमिति गव्यूतिषट्के वद ॥ ८४ ॥

12	8
16	12
14	10
30	14
1	6
8	

न्यासः—लब्धं भाटकद्रम्माः, 8, (अत्र प्रमाणफले पक्षान्तरं प्रापिते $\frac{8\times12\times10\times14\times6\times8}{12\times16\times14\times30\times1}=8$, द्रम्माः)

प्रथमोदितप्रमितयः=पूर्वश्लोकोक्तपरिमाणाः, ये पट्टाः, गव्यूतिमात्रे=क्रोशद्वयमात्रे, स्थिताः तेषां पट्टानां आनयनाय=नगरं प्रत्यानयनार्थं, शकटिनां=शकटो विद्यत एषामिति शकटिनः शकटजीविनः, तेषां, द्रम्माष्टकं, भाटकं=वेतनं चेत्, तदा येतावत्पट्टा मानैश्चतुर्हीना इति तदनन्तरं निगदिताः, तेषां, गव्यूतिषट्के=क्रोशद्वादशके स्थितानां नगरं प्रत्यानयनार्थं भाटकमितिः का भवतीति वद ॥८४॥

त्रयोदशराशिकादिकमप्यनया दिशा वेदितव्यम् ।

इति पञ्चराशिकादीनि ॥

अथ भाण्डप्रतिभाण्डकसूत्रं वृत्तार्धम्—

तथैव भाण्डप्रतिभाण्डकेऽपि विधिर्विपर्यस्य हरांश्च मूल्ये ॥८४=॥

उदाहरणम्-द्रम्मेण लभ्यन्त इहाऽऽम्रशतत्रयं चेत्

त्रिंशत्पणेन विपणौ वरदाडिमानि ।

आम्रैर्वदाऽऽशु दशभिः कति दाडिमानि

लभ्यानि तद्विनिमयेन भवन्ति मित्र ! ॥८५=॥

न्यासः—

16	1
300	30
	10

लब्धानि, दाडिमानि 16,

अथ भाण्डप्रतिभाण्डके विशेषविधिमुपदिशन् पञ्चराशिकोक्तं शिष्टमतिदिशति-तथेति-विज्ञातमूल्ययोः पण्यवस्तुनोरेकतरेणान्यतरस्य विनिमयो भांडप्रतिभांडकशब्देनोच्यते। इदमपि पञ्चभीराशिभिर्निर्वर्त्यते। तत्र प्रमाणराशिद्वयं, प्रमाणफलराशिद्वयं, इच्छाराशिरेक इति पञ्च राशयः। भांडप्रतिभांडकेऽपि=तत्संज्ञकगणितेऽपि, मूल्ये=पण्यमूल्ये, द्वितीयाद्विवचनमिदं। हरांश्च=छेदांश्च, विपर्यस्य=इतरेतरपक्षे प्रतिक्षिप्य, विधिः=अवशिष्ट-

विधिः, तथैव=पञ्चराशिकोक्तवदेव, कार्य इति शेषः। एतदुक्तं भवति–प्रमाणभाण्डं, तन्मूल्यं, चैकत्र पक्षे निवेश्यम्। प्रतिभाण्डं, तन्मूल्यं चेच्छाराशिश्चान्यत्र पक्षे। अत्रापि मूल्ययोस्समजातितया भाव्यम्। अथ मूल्यविपर्ययं कृत्वा "अन्योन्यपक्षनयनं फलच्छिदामि"ति पञ्चराशिकोक्तरीत्या कृते प्रतिभाण्डसंख्या लभ्यत इति। अत्र मूल्ययोरन्योन्यपक्षनयनं विशेषः। अन्यत्सर्वं पञ्चराशिकतुल्यम्। अत्र प्रमाणराशी पण्यात्मकौ। तत्फलराशी मूल्यात्मकौ। पण्यान्तरं येन जिघृक्षितं, स इच्छाराशिः। आद्यप्रमाणफलं यत्र नीतं, स बहुराशिः। तद्वधे स्वल्पराशिवधभाजिते फलं भवति। तथा न्यासः, $\frac{16 \times 30 \times 10}{300 \times 1} = 16$, दाडिमानि।

अत्रोपपत्तिस्त्रैराशिकद्वयेन। तथा हि—यद्याम्रशतत्रयस्य षोडशपणात्मको द्रम्मो मूल्यं, तदा दशानामाम्राणां किमिति प्रथमं त्रैराशिकम्। तेन, $\frac{16 \times 10}{300} = \frac{8}{15}$, लब्धमिदं दशाम्रमूल्यम्। यदि द्रम्मषोडशांशात्मकेन पणेन त्रिंशत् दाडिमानि, तदा दशाम्रमूल्येन, $\frac{8}{15}$, अनेन कतीति द्वितीयं त्रैराशिकम्। तेन $\frac{30 \times 8}{1 \times 15} = 16$, लब्धानि आम्रप्रतिभाण्डानि दाडिमानि। एवं त्रैराशिकद्वयेन मूल्यविपर्यासानन्तरं पञ्चराशिकविधिर्दृश्यत इत्युपपन्नम्। अत्रोदाहरणं द्रम्मेणेति—हे मित्र! इह विपणौ=अस्यां पण्यवीथिकायां, द्रम्मेण, आम्रशतत्रयं=आम्राणां=आम्रवृक्षफलानां "अवयवे च प्राण्योषधिवृक्षेभ्य" इति छप्रत्ययः। "फले लुगि"ति तस्य लुक्। शतत्रयं लभ्यते चेत्, तथा, पणेन, वरदाडिमानि=श्रेष्ठानि दाडिमीफलानि, प्रत्ययलोपौ प्राग्वत्। "लुक्तद्धितलुकी"ति स्त्रीप्रत्ययलोपः। त्रिंशल्लभ्यन्ते चेत्, तदा दशभिराम्रैः, तद्विनिमयेन कति दाडिमिफलानि लभ्यानि भवन्ति। आशु वद॥ ॥८५८॥

इति भाण्डप्रतिभाण्डकम्। समाप्तानि प्रकीर्णकानि॥